குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.178/2022

அ.சா.1

2025–ம் ஆண்டு ஜனவரி 29–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | ஜாதி | |
| கணவர் பெயர் | செல்லப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.00 மணி,

Accused Thangaraj Present. Advocate Mr.P.Gopal present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் தாசநாயக்கன்பட்டியில் குடியிருந்து, டெய்லர் வேலை செய்து வருகிறேன். விபத்தில் காயமடைந்து இறந்துபோன செல்லப்பன் எனது கணவர். கடந்த 23.10.2019 ஆம் தேதி கோணகாப்பாடியில் உள்ள என் கணவரின் அக்கா வீட்டிற்கு செல்வதற்காக அவர், டி.என்.27 டபிள்யூ, 8609 என்ற பதிவெண் கொண்ட டி.வி.எஸ் – 50 வாகனத்தில் சென்றார். என் கணவரின் அக்காவின் கணவர் கருப்பன் எனக்கு போன் செய்து, முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் நான்கு ரோடுகள் சந்திக்கும் இடத்தில் எனது கணவர் எங்கள் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது, லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்.

2. நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று, பார்த்தபோது, என் கணவருக்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு, ரத்தம் வந்து கொண்டிருந்தது. தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றோம். மருத்துவர் பரிசோதித்துவிட்டு, என் கணவர் இறந்துவிட்டதாக சொன்னார். நான் இதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம்

காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. என் கணவரின் மீது, மோதி விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் மற்றும் அதன் ஓட்டுநர் குறித்த விபரம் எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**4.** விபத்து நடந்ததாக காலை 08.40 மணிக்கை எனக்கு தகவல் கிடைத்தது. நான், 09.00 மணிக்கு சம்பவ இடம் வந்து பார்த்தேன். அப்போது என்னுடன் சுமார் 5 – 6 நபர்கள் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். நான், சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, எனது கணவர் செல்லப்பன் இறந்துவிட்டாரா என்றால், நான் சம்பவ இடம் சென்றபோது, அவர் இரத்த வெள்ளத்தில் இருந்தார். மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அவரை பரிசோதித்த மருத்துவர் இறந்துவிட்டதாக சொன்னார். அப்போது தான் எனக்கு தெரியும்.

5. நாங்கள், மருத்துவமனைக்கு சென்றபோது, 09.55 மணி இருக்கும். எத்தனை மணிக்கு மருத்துவர் எனது கணவரை பரிசோதித்து பார்த்தார் என்றால், நாங்கள் சென்றவுடன் பரிசோதித்து பார்த்தார். நாங்கள் தாரமங்கலம் காவல் நிலையத்திற்கு வந்தபோது 12.00 மணிக்குள்ளாக இருக்கும். நான், தாரமங்கலம் காவல் நிலையத்தில் எனது கணவருக்கு விபத்து நடந்த சங்கதியை கூறினேன் என்றாலும், அவர்கள் புகார் எழுதி என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றாலும் சரி.

6. மேற்படி புகாரில் என்ன எழுதியது என்று எனக்கு தெரியாது. என்றால் சரியல்ல. நான் சொல்லச்சொல்ல எழுதினார்கள். அதனால் எனக்கு தெரியும். எனது கணவருக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்று எனக்கு தெரியவில்லை. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. இவ்வழக்கு சம்பவம் முத்துநாயக்கன்பட்டி செல்லும் ரோட்டில் 4 வழி சாலை அருகே நடந்தது என்றால் சரி.

7. மேற்படி நான்கு வழிச்சாலையின், நான்கு ரோடுகளிலும் வேகத்தடை உள்ளது என்றால் சரி. எனது கணவர் கோணகாப்பாடியில் இருந்து மேற்படி நான்கு ரோடு சந்திப்பை கடந்து தான் எனது வீட்டிற்கு வரவேண்டும் என்றால் சரி. விபத்து ஏற்படுத்திய லாரியை சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். அதன்பின்பு, காவல்

நிலையம் எடுத்து சென்றபோது பார்த்தேன். மேற்படி விபத்து ஏற்படுத்திய லாரியில் லோடு எதுவும் இல்லை.

8. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், போலிசார் கூறியதன் அடிப்படையில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் எனது கணவர் என்பதால் நஷ்டஈடு பெறுதவற்காக அதற்கேற்ப சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.17 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.